**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.289/2022**
**Prosecution Witness – PW.5**

| | |
|---|---|
| Name | : திருமதி.வின்செண்ட் அன்பரசி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

(Accused Present).

முதல் விசாரணை–

நான் தற்பொழுது நாகர்கோவில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னால், 11.04.2020 நான் குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராகவும் பொறுப்பு கருங்கல் காவல் நிலைய ஆய்வாளராகவும் பணியில் இருந்த போது கருங்கல் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஹரி குமார் நாயர் என்பவர் கருங்கல் காவல் நிலைய குற்ற எண்.153/2020 பிரிவு 41A, 14A, TNP Act ன் படி வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்த முதல் தகவல் அறிக்கையினை பார்வையிட்டும் மேற்படி வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சாட்சிகள் கருங்கல் காவல் நிலையம் ஹரிக்குமார் நாயர் உதவி ஆய்வாளர், சிறப்பு உதவி ஆய்வாளர் குமார், முதல் நிலை காவலர் சிவக்குமார், ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையத்தில் இருந்த எதிரி ராஜேஸ் 11.30 மணிக்கு கைது செய்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து நிலைய ஆவணங்களை பதிவு செய்தும், உதவி ஆய்வாளர் ஹரிக்குமார் சம்பவ இடத்தில் அத்தாட்சி கைப்பற்றிய பொருள்கள் மற்றும் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் தங்கராஜ் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

குறுக்கு விசாரணை

ஹரிக்குமார் நாயர், குமார் மற்றும் சிவக்குமார் போலீஸ்காரர்களை எப்பொழுது விசாரித்தேன் என்றால், அன்றைய தேதியிலேயே விசாரித்தேன். நான் கருங்கல் காவல் நிலையத்தில் எவ்வளவு காலம் ஆய்வாளராக இருந்தேன்

என்றால், நியாபகம் இல்லை. மேற்படி நபர்களை விசாரிக்கும் பொழுது யாருடைய உத்தரவின் பெயரில் எப்பொழுது ரோந்துக்கு சென்றார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். கருங்கல் பகுதி பயிற்சி உதவி காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பெயரில் ரோந்துக்கு சென்றார்கள். நான் பொறுப்பு ஆய்வாளர் என்ற முறையில் என்னிடத்தில் சொல்லி தான் சென்றிருக்க வேண்டும் என்றால், ஆமாம். எந்த வண்டியில் ரோந்துக்கு சென்றார்கள் என்றால், போலீஸ் அவர்களது வாகனத்தில் தான் சென்றார்கள். எத்தனை வாகனத்தில் சென்றார்கள் என்றால், 3 போலீஸ்காரர்களும் அவர்களுடைய இருச்சக்கர வாகனத்தில் சென்றார்கள். 3 போலீஸ்காரர்களும் காவல் நிலையத்தில் இருந்து ஒன்றாக சென்றார்கள். சம்பவ இடத்திலும் ஒன்றாக இருந்தார்கள் என்று தெரிந்து கொண்டேன். காவல் நிலையத்தில் உள்ள SHO முத்திரையை நான் மட்டும் தான் பயன்படுத்த முடியுமா அல்லது வேறு யாரும் பயன்படுத்த முடியுமா என்றால், அன்றைய தினம் யார் SHO ஆக இருக்கிறார்களோ அவர்கள் தான் பயன்படுத்த முடியும். நான் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும் ASP சொன்னதன் அடிப்படையில் கருங்கல் காவல் நிலைய எழுத்தர் Type செய்து வைத்திருந்ததில் புள்ளியல் நோக்கத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கில் பொய்யாக விசாரணை செய்ததாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. எதிரிக்கும் வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**